23rd January 1965]

(இ) இது பற்றிய ஆடிட் ரிபோர்ட்டுமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The loss of cement due to clodding came to the notice of the Executive Engineer in 1963 and thereafter action was taken to fix the responsibility. Final orders recovering the loss from the persons responsible have been issued in April 1964.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பகுதிக்கும் சிமெண்ட் அனுப்புகிற நேரத்தில் போடுகிற மதிப்பீடு தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறதா? அதை அனுசரித்து அனுப்புகிற அளவைக் குறைக்க அராங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: முன்பு இருந்த பழக்கம், சிமெண்ட் பற்றுக்குறையாக இருக்கிற காரணத்தினால் ஒவ்வொரு என்ஜினியரும் தேவையான சிமெண்ட்டை ஆரம்பத்திலேயே கிடைக்கக்கூடிய நேரத்திலேயே வாங்கவேண்டுமென்று பட்டியல் தயார் செய்து வாங்கி சில இடங்களில் இந்தத் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. பிறகு எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசி எவ்வளவு உபயோகப்படுத்த முடியுமோ அதை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆகையால் தொடர்ந்து இந்த விதக் கஷ்டம் இருக்காது.

கிணறுகள் வெட்டக் கடன்.

* 100. **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்தணி தாலுகாவில், தனி நபர் ஒருவருக்குக் கிணறுகள் வெட்டுவதற்காக 30,500 ரூபாய் கொடுத்தது உண்மையா?

(இ) அந்தப் பணம் கிணறுகள் வெட்டப் பயன்படவில்லை என்பது உண்மையா?

(உ) அதை வசூலிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை போதுமானதன்று என 1963-64-ம் ஆண்டுப் பொதுக் கணக்குக் குழு கருத்துத் தெரிவித்துள்ளதா?

(எ) அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes. This amount is made up of loans granted by the Government of Andhra Pradesh from 1946 to 1952 for sinking or deepening of wells as well as for reclamation of land and construction of a cattle shed and a farm house before Tiruttani taluk was transferred to this State.

(*b*) Six new wells were sunk by the loanees and four of these proved unsuccessful.

[23rd January 1965

(*c*) The Andhra Pradesh Government had already granted remission of Rs. 15,500 out of this loan and the recovery of the balance of Rs. 15,000 alone is pending in this State. The Public Accounts Committee has suggested that the case may be re-examined by the Madras Government with a view to satisfying itself whether the grant of interest-free loan recoverable in 10 instalments is justifiable.

(*d*) The matter is under the consideration of the Government in consultation with the Board of Revenue (Land Revenue).

திரு. எஸ். மணி: *தலைவர் அவர்களே, கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகிற மானியம் மூன்று தவணைகளில் அல்லது நான்கு தவணைகளில் கொடுக்கிறார்கள். அதை இரண்டு தவணைகளில் அல்லது ஒரே தவணையில் கொடுக்க. . . .*

கனம் சபாநாயகர்: *இது வேறு கேள்வி. ஒருவருக்கு 30,000 ரூபாய் கொடுத்தார்களாம். அதைப் பற்றியது இந்தக் கேள்வி. பொதுவான கேள்வியை கனம் அங்கத்தினர் தனியாகக் கேட்கலாம்.*

State Flood Control Board

* 101 *Q.*—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of meetings held so far by the State Flood Control Board and the Technical Advisory Committee; and

(*b*) the recommendations made by the Board thereon?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The State Flood Control Board and the Technical Advisory Committee have not met so far.

(*b*) The question does not arise.

திரு. கரு. சீமைச்சாமி: *ஆறுகளிலே அதிகமான வெள்ளம் வருகிற போது கால்வாய்கள் மூலம் கண்மாய்களுக்குத் தண்ணீர் சென்று மழைகாலத்தில் கண்மாய்கள் உடைந்து விடுகின்றன. பெரிய வெள்ளம் வரும்போது அந்த மாதிரி கால்வாய்களில் தண்ணீர் போகாமல் ஷட்டர்ஸ் போட்டுத் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. வெ. ராமையா: இதெல்லாம் ஒவ்வொரு பாசனத் திட்டத்தையும் இம்ப்ரூவ் செய்ய பரிசிலனை செய்யும்போது மனதில் வைத்துக் கொண்டுதான் திட்டங்கள் உருவாகும்.

Sugar-quota

* 102 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the average monthly quota of sugar allotted for the State;